வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

நாள்: 05.07.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் 8 முதல், 10ஆம் தேதி வரை, ரஷ்யா மற்றும் ஆஸ்திரியா-விற்கு பயணம் மேற்கொள்கிறார்.

இந்திய பாதுகாப்பு உற்பத்தித் துறையின் உற்பத்தி மதிப்பு, முன் எப்போதும் இல்லாத அளவில் அதிகரித்து இருப்பதை, பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டி உள்ளார்.

ரயில்வே துறை இந்த ஆண்டிற்குள், முன்பதிவு இல்லாத 2ஆயிரத்து 500 ரயில் பெட்டிகளையும், அதை தொடர்ந்து இத்தகைய 10 ஆயிரம் ரயில் பெட்டிகளையும் தயாரிக்க உள்ளது.

EPF மற்றும் ESI பணியிடங்களுக்கான போட்டித் தேர்வு புதுச்சேரியில் வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெற உள்ளது.

----------------------------

மோடி-வெளிநாடு (15)

பிரதமர் திரு. நரேந்திர மோடி வரும் 8 முதல் 10ஆம் தேதி வரை, ரஷ்யா மற்றும் ஆஸ்திரியாவிற்கு, அதிகாரப்பூர்வ பயணம் மேற்கொள்கிறார். இப்பயணத்தின் போது ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டினுடன் இணைந்து, இருநாடுகளுக்கும் இடையிலான பன்முக உறவுகளின் எல்லா அம்சங்களையும் அவர் மறு ஆய்வு செய்வார் என்று வெளியுறவுச் செயலர் திரு. வினய் மோகன் குவாத்ரா இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம்

தெரிவித்தார். இரு தலைவர்களும், நடப்பு பிராந்தியப் பிரச்சனைகள், மற்றும், பரஸ்பர அக்கறை உள்ள சர்வதேச பிரச்சனைகள் குறித்து கருத்துக்களை பரிமாறிக் கொள்வார்கள் என்றும், பிரிக்ஸ், ஜி-20 உள்ளிட்ட அமைப்புகளில், இருதரப்பு ஈடுபாடுகளின் நடப்பு நிலை குறித்தும், இரு தலைவர்களும் விவாதிப்பார்கள் என்றும், அவர் கூறினார். 22ஆவது இந்தியா-ரஷ்யா வருடாந்திர உச்சி மாநாட்டின் விவாதங்களில், பாதுகாப்பு, வர்த்தகத் தொடர்புகள், முதலீட்டு உறவுகள், எரிசக்தி ஒத்துழைப்பு, கல்வி, கலாச்சாரம். அறிவியல்-தொழில்நுட்பம், மற்றும், மக்கள் நிலையிலான தொடர்புகளில் முக்கிய கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

----------------------------

மோடி-வாழ்த்து (8)

இங்கிலாந்து பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள திரு. கேர் ஸ்டார்மருக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்தியாவிற்கும்-இங்கிலாந்திற்கும் இடையே நிலவும் விரிவாக உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வதில், ஆக்கப்பூர்வ முறையில் இருவரும் ஒத்துழைக்க தாம் ஆர்வம் கொண்டுள்ளதாக, திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இருதரப்பு உறவுகளை ஆழமாக்குவதில், பதவிக் காலத்தின் போது முக்கிய பங்களித்த திரு. ரிஷி சுனக்-கிற்கும், திரு. நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார்.

----------------------------

பாதுகாப்பு உற்பத்தி (14)

கடந்த நிதியாண்டில் இந்திய பாதுகாப்பு உற்பத்தித் துறையின் உற்பத்தி மதிப்பு, முன் எப்போதும் இல்லாத அளவில், 1 லட்சத்து 26 ஆயிரத்து 887 கோடி ரூபாயாக, 16.8 சதவிகிதம் அதிகரித்து இருப்பதை, பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டி உள்ளார். இது மிகவும் நம்பிக்கையூட்டும் போக்கு என்றும், இதனால் நாட்டின் பாதுகாப்பு வலுவடைந்து, சுயசார்பு மேம்படும் என்றும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறியுள்ளார். பாதுகாப்பு உற்பத்தித் துறையின் உற்பத்தி வசதிகளை மேலும் அதிகரிக்கவும், இத்துறையில் உலகக் கேந்திரமாக இந்தியாவை மேம்படுத்தவும், அரசு உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார். கடந்த நிதியாண்டில், பாதுகாப்பு உற்பத்தி துறையின் மொத்த உற்பத்தி மதிப்பில், பொதுத் துறை நிறுவனங்கள், 79.2 சதவிகித அளவிலும், தனியார் துறையினர், 20.8 சதவிகித அளவிலும் பங்களித்து இருப்பதாக, பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. பாதுகாப்பு உற்பத்தித் துறையின் சாதனைகளை, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் பாராட்டி உள்ளார்.

----------------------------

மோடி-ஒலிம்பிக் (17)

பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கச் செல்லும் இந்திய அணியினரை பிரதமர் திரு. நரேந்திர மோடி சந்தித்து கலந்துரையாடினார். இவர்கள் இந்தியாவிற்கு பெருமை சேர்ப்பார்கள் என தாம் நம்புவதாக தெரிவித்தார். ஒலிம்பிக் என்பது, வெற்றிக்கான களம் மட்டுமின்றி,

கற்பதற்கான களமாகவும் திகழ்வதாக அவர் கூறினார். இத்தகைய போட்டிகளில் பங்கேற்கும் வீரர்கள், அனைத்து புகார்கள் மற்றும் சாக்கு-போக்குகளை புறம் தள்ளிவிட்டு, ஒரே நோக்கத்துடன் முன்னேறி வெற்றி பெற வேண்டும் என அவர் வலியுறுத்தினார். விளையாட்டுத் துறையில், பயிற்சியும், விடா முயற்சியுமே மிக முக்கியம் என்றும், கவனக் குவிப்பும், நேர்மறை சிந்தனையும் இருந்தால், வெற்றி சாத்தியமே என்றும் அவர் தெரிவித்தார். விளையாட்டு வீரர்களின் கடும் உழைப்பை பிரதமர் பாராட்டினார். ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்பது, நாட்டிற்கு பெருமை சேர்ப்பதற்கான வாய்ப்பு என்பதை இவர்கள் நினைவில் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். 2036ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை இந்தியாவில் நடத்த முடியும் என இந்தியா நம்புவதாகவும், இதற்கான உள்கட்டமைப்பு உட்பட, எல்லா வசதிகளையும் உருவாக்க, தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதாகவும், பிரதமர் தெரிவித்துள்ளார்.

-----------------------------

*நட்டா* (15)

மகப்பேற்றுக் கால தாய்-சேய் மரணங்களைக் குறைப்பதில் இந்தியா, உலக சராசரியை விட, அதிக வேகத்தில் செயல்பட்டு உள்ளதாக, மத்திய சுகாதார அமைச்சர் திரு. ஜேபி நட்டா தெரிவித்துள்ளார். உலக அளவிலான தாய்-சேய் மற்றும் குழந்தைகள் நலக் கூட்டாண்மை சார்பில், ஜெனீவாவில் நடைபெற்ற இந்த அமைப்பின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில், மெய்நிகர்

முறையில் அவர் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்தியா, இக்கூட்டாண்மையின் துணைத் தலைமை நாடு என்ற முறையில், பெண்கள், குழந்தைகள், மற்றும், வளர் இளம் பருவத்தினரின் நலன்களை பாதுகாக்கவும், இளைஞர்களை சரியான பாதையில் செலுத்தவும், ஆண்-பெண் சமத்துவத்தை ஊக்குவிக்கும் உறுதி பூண்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இத்தகைய பிரச்சனைகளில், தென்புல நாடுகளுக்கும், வடபுல நாடுகளுக்கும் இடையே, சமநிலை ஒன்றை உருவாக்க, இந்தியா கடந்த ஆண்டுகளில் பாடுபட்டு வந்திருப்பதாகவும் அவர் கூறினார். இந்தியாவில் விரிவான பல சுகாதாரத் திட்டங்கள் அமலாகி வருவதால், 2030ஆம் ஆண்டிற்கான நீடித்த வளர்ச்சி இலக்குகளை அதற்கு முன்பாகவே எட்டிவிட முடியும் என்று அமைச்சர் மேலும் கூறினார்.

----------------------------

*நீட்-பிஜி* (7)

முதுகலை மருத்துவ மாணவர் சேர்க்கைக்கான நீட்-பிஜி நுழைவுத் தேர்வு அடுத்த மாதம் 11ஆம் தேதி, 2 ஷிப்ட்களாக நடைபெற உள்ளது. இதற்கான திருத்தப்பட்ட கால அட்டவணையை, மருத்துவ அறிவியல் தேர்வுகளுக்கான தேசிய வாரியம் இன்று வெளியிட்டுள்ளது. நீட் பிஜி தேர்வு சென்ற மாதம், ஏற்கனவே திட்டமிடப்பட்ட தேதிக்கு ஒருநாள் முன்பாக ஒத்தி வைக்கப்பட்டது. சில போட்டித் தேர்வுகளின் நேர்மைத் தன்மை குறித்து குற்றச் சாட்டுகள் வெளியானதை தொடர்ந்து இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது.

----------------------------

*பிரசார் பாரதி* (3)

பிரசார் பாரதி தலைவர் திரு. நவநீத் குமார் சேகல் இன்று கொல்கத்தா ஆகாஷ்வாணி நிலையத்தில் நேரடி ஆய்வு மேற்கொண்டார். நிலையத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் ஒன்றையும் நடத்தினார்.

-----------------------------

*ரயில்வே* (17)

ரயில்வே துறை இந்த ஆண்டிற்குள், முன்பதிவு இல்லாத 2ஆயிரத்து 500 ரயில் பெட்டிகளையும், அதை தொடர்ந்து, இத்தகைய 10 ஆயிரம் ரயில் பெட்டிகளையும் தயாரிக்கும் என்று ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். பொருளாதார ரீதியில் பின்தங்கிய பிரிவினர் மற்றும் நடுத்தர வகுப்பினருக்கான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதில், அரசு முக்கிய கவனம் செலுத்தி வருவதாகவும், அவர் கூறியுள்ளார். கடந்த ஆண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடக்கி வைத்த 2 அமிர்த பாரத் ரயில்களின் நோக்கம் இதுவே என்றும் அவர் கூறியுள்ளார். மேலும் 50 அமிர்த பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்களை தயாரிக்கும் பணிகள் ஏற்கனவே தொடங்கி விட்டதாகவும், சிக்னலை கவனிக்காமல் செல்லும் ரயில்களை நிறுத்தி, விபத்துகளை தவிர்ப்பதற்கான கவச் வசதியின் அமலாக்கம் துரிதமாக்கப் படுவதாகவும், அமைச்சர் தெரிவித்துள்ளார். இன்று புதுடெல்லியில், இந்திய ரயில்வேயின் கதி சக்தி பல்கலைக் கழகத்திற்கும், ஏர் பஸ் விமான உற்பத்தி நிறுவனத்திற்கும் இடையே, புரிந்துணர்வு ஒப்பந்தம்

கையெழுத்தாகும் நிகழ்ச்சியில் அவர் உரையாற்றினார். நடப்பு கோடை பருவத்தில், பயணிகள் நெரிசலை சமாளிக்கும் வகையில், சுமார் 10 ஆயிரம் சிறப்பு ரயில்களை ரயில்வே துறை இயக்கி வருவதாக அவர் தெரிவித்தார்.

----------------------------

பூரி ஜெகந்நாதர் (12)

ஒடிசாவில் உலக புகழ்பெற்ற பூரி ஜெகந்நாதர் கோவில் ரத யாத்திரை வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெற உள்ளது. இதற்கான இறுதிகட்ட ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது. தேர் திருவிழாவை வெற்றிகரமாக நடத்த, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரின் கூட்டு ஒத்துழைப்பை நாடுவதாகவும் கோவில் நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது. பூரி ஜெகந்நாதர் ரத யாத்திரையை ஒட்டி, ஒடிசா அரசு வரும் 7, 8 ஆகிய தேதிகளில், 2 நாள் விடுமுறை அறிவித்துள்ளது. இம்முறை ரத யாத்திரை விழாவில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கலந்து கொள்ள இருக்கிறார். ஒடிசா ஆளுநர் திரு. ரகுபர்தாஸ், முதலமைச்சர் திரு. மோகன் மாஜி ஆகியோரும் விழாவில் பங்கேற்ற உள்ளனர். பூரி ஜெகந்நாதர் ரத யாத்திரையை ஒட்டி 315 சிறப்பு ரயில்களை இயக்க ரயில்வே துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

----------------------------

கூட்ட நெரிசல் (11)

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திரு. ராகுல்காந்தி இன்று உத்தரபிரதேஷ் மாநிலம் ஹத்ராஸ் பகுதியில், கூட்ட நெரிசல் சம்பவத்தால்

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். பெரும்பாலும் மோசமான பொருளாதார நிலையில் உள்ள இவர்களுக்கு, அதிகபட்ச இழப்பீடு வழங்க வேண்டியது அவசியம் என்று அவர் வலியுறுத்தினார். இதற்கிடையே, சம்பவம் குறித்து விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட சிறப்பு புலனாய்வுக் குழுவினர், இன்று உத்தரபிரதேஷ் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத்தை சந்தித்து, 15 பக்க அறிக்கை கொடுத்துள்ளனர். கூட்ட நெரிசலுக்கு காரணமான நிகழ்வில் பங்கேற்றவர்கள், நிர்வாக அதிகாரிகள் உட்பட சுமார் 100 பேரின் வாக்குமூலங்கள் இந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

-----------------------------

*சம்பூர்ணதா* (8)

தமிழகத்தில், அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம், விருதுநகர் மாவட்டம் திருச்சுழி, ராணிப்பேட்டை மாவட்டம் திமிரி உள்ளிட்ட மாவட்டங்களில், மத்திய அரசின் சம்பூர்ணதா விழிப்புணர்வு பிரச்சார இயக்கம் இன்று நடைபெற்றது. வளர்ச்சி ஆர்வம் அதிகம் உள்ள மாவட்டங்கள் மற்றும் வட்டங்களில், வரும் செப்டம்பர் 30ஆம் தேதி வரை நடைபெற உள்ள இந்த இயக்கத்தின் கீழ், மத்திய அரசின் பல்வேறு நலத் திட்டங்களை, வட்ட அளவில் முழுமையாக செயல்படுத்தி, வளர்ச்சியை உறுதிப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப் படுகின்றன.

-----------------------------

*போட்டித் தேர்வு (11)*

ஊழியர் வருங்கால வைப்பு நிதிக் கழகத்தில் காலியாக உள்ள நேர்முக உதவியாளர் பணியிடங்கள், மற்றும், ஊழியர் அரசு காப்புறுதிக் கழகத்தில் காலியாக உள்ள செவிலியர் அதிகாரி பணியிடங்களுக்கான போட்டித் தேர்வு மையங்களில் ஒன்றாக, மத்திய பணியாளர் தேர்வாணையம் புதுச்சேரியை தெரிவு செய்துள்ளது. புதுச்சேரியில், வரும் 7ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணி முதல் 11.30 மணி வரை, பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரியில், EPF நேர்முக உதவியாளர் பணியிடங்களுக்கும், அன்று மதியம் 2 மணி முதல் 4 மணி வரை, அமலோற்பவம் மேல்நிலைப் பள்ளி உள்ளிட்ட 8 மையங்களில், ESI செவிலியர் அதிகாரி பணியிடங்களுக்கும் போட்டித் தேர்வு நடைபெறும். தேர்வர்கள் தத்தம் தேர்வு மையங்களுக்கு சென்று திரும்ப அன்றைய தினம் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என புதுச்சேரி அரசு அறிவித்துள்ளது.

-----------------------------

*ஸ்டாலின்* (7)

தமிழகத்தில் பள்ளி மாணவர்களுக்கான காலை உணவு விரிவாக்கத் திட்டத்தை, திருவள்ளூர் மாவட்டம் கீழச்சேரியில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளியில், முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலின்வரும் 15ஆம் தேதி தொடக்கி வைக்கிறார். ஊரகப் பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளில், 1 முதல 5ஆம் வகுப்பு வரை பயிலும் சுமார் 2 லட்சத்து 20 ஆயிரம் குழந்தைகள்

பயன்பெறும் வகையில், தமிழக அரசு மொத்தம் 600 கோடி ரூபாய் செலவு மதிப்பீட்டில் இத்திட்டத்தை செயல்படுத்த உள்ளது.

-----------------------------

*டாக்டர் ராமதாஸ்* (6)

கர்நாடகத்தில் அணைகள் நிரம்பி வருவதால், காவிரியில் தண்ணீர் திறக்க தமிழக அரசு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் கோரியுள்ளார். வழக்கமாக ஜூன் 12ஆம் தேதி திறக்கப்பட வேண்டிய மேட்டூர் அணை, இவ்வாண்டு இதுவரை திறக்கப் படாததால், காவிரிப் பாசன மாவட்டங்களில், சாகுபடி பணிகள் பாதிக்கப் பட்டுள்ளதாக, சென்னையில் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

-----------------------------

*வானிலை* (6)

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்றும், நாளையும், தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும 11 ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, வேலூர் மாவட்டம் பொன்னை அணையில் 3 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

-----------------------------

*மகளிர் கிரிக்கெட் (5)*

மகளிர் கிரிக்கெட்டில், இந்திய-தென்ஆப்ரிக்க அணிகளுக்கு இடையிலான முதலாவது 20 ஓவர் போட்டி, சென்னையில் இன்று இரவு 7 மணிக்கு தொடங்க உள்ளது. இரு அணிகளுக்கு இடையில் ஏற்கனவே நடைபெற்ற 3 ஒருநாள் போட்டிகளிலும், 1 டெஸ்ட் போட்டியிலும் இந்தியா வெற்றி பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

-----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் 8 முதல், 10ஆம் தேதி வரை, ரஷ்யா மற்றும் ஆஸ்திரியா-விற்கு பயணம் மேற்கொள்கிறார்.

இந்திய பாதுகாப்பு உற்பத்தித் துறையின் உற்பத்தி மதிப்பு, முன் எப்போதும் இல்லாத அளவில் அதிகரித்து இருப்பதை, பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டி உள்ளார்.

ரயில்வே துறை இந்த ஆண்டிற்குள், முன்பதிவு இல்லாத 2ஆயிரத்து 500 ரயில் பெட்டிகளையும், அதை தொடர்ந்து இத்தகைய 10 ஆயிரம் ரயில் பெட்டிகளையும் தயாரிக்க உள்ளது.

EPF மற்றும் ESI பணியிடங்களுக்கான போட்டித் தேர்வு புதுச்சேரியில் வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெற உள்ளது.